# திருமுருகாற்றுப்படை-ஆராய்ச்சி

நூலின்வரலாறு.

அமிழ்தினுமினிய தமிழ்மொழியில் கடைச்சங்கத்தார்காலத்தியற்றித்தொகுக்கப்பட்டுள்ள தொகைநூல்களுள் பத்துப்பாட்டில் முதலாவதாகிய திருமுருகாற்றுப்படை, முருகன் விஷயமாகப் புலவர்பெருமான் நக்கீரர் இயற்றியது. அழகியமுருகரிடத்து ஆற்றுப்படுப்பதென்று பொருள்படும் இந்நூல் நக்கீரர் தமக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கும்பொருட்டு முருகவேளைத் துதித்துச் சொல்லியதாகும். முருகருடைய படைவீடுகளென்று சொல்லப்படும் ஆறனுள் முதன்மைபெற்ற திருப்பரங்குன்றத்திற்கருகில் ஒரு வனத்தினிடையில் திரிந்துகொண்டிருந்தவொரு பூதம் சிவநேசர் ஆயிரவரை ஓரேதினத்திற் புசிக்கவேண்டுமென்ற கொடியவெண்ணங்கொண்டதாய்த் தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பதின்மரைத்திரட்டி அவர்

ரியற்றிய வேறு நூல்களாகிய கோபப்பிரசாதம், கைலைபாதிகாளத்திபாதியந்தாதி, பெருந்தேவபாணி, எழுகூற்றிருக்கைமுதலியவைவெல்லாம் உமாபதிவிஷயமாகவேயிருத்தல் மேற்கூறிய கருத்துக்குச் சிறந்த ஆதாரமாகின்றது.

முருகதாசரால் இக்காலத்தியற்றப்பட்ட புலவர்புராணத்தில், 'சங்கங்கையாலறுத்துச் சீர்படுத்தி விற்றுண்பான்றன்சேயாயு, மங்கந்தத் தொழின்முயலச் சம்மதியாதருந்தமிழ்தேர்ந் தறிஞனாகி' எனக் கீரனென்ற சொல்லிற்குக் கீர் கீரென்று ஓசையுண்டாகச் சங்குகளையறுக்குமொரு வகைஜாதியாருண்டென்றும், அக்கீரபிற்றோன்றிய காரணம்பற்றியே நற்கீரரெனப் பெயர்வந்ததென்றுங்கண்டிருக்கிறது. சிறந்த சொற்களாலமைந்த பாவிசைத்தலில் வல்லவரென இயற்கையாகப் பொருள்படும் பதத்தை, வழக்கத்திற்குமாறாக, வெகு சிரமப்பட்டுப் பொருள்கூறி, அதன் மூலமாகக் கீரருடைய பிறப்புமுதலியவற்றைத் தெரிவிக்கப்போந்தமை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்கதன்று. மேலே குறித்தபடி ந+கீரரென்பதே வழக்கத்திற்குப்பொருத்தமாயிருக்க, (நல்+கீரரென) அவர் பெயரை நற்கீரரெனக்கொள்ளுதல் அத்துணைச்சிறந்ததன்று. மேலும் இப்போது கிடைக்கக்கூடிய ஆதாரங்களுள் மிகவுஞ்சிறந்ததும் பழமையானதாயுமுள்ளது நச்சினார்க்கினியருரை. அவருரையினிறுதியில் நக்கீரனார் எனக் குறித்த பெயரே புலவர்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாகும். கீரன், கீரனார், நக்கீரனார் என்னும் பெயர்கள் முறையே இந்நூலாசிரியர் தமது கல்வியில் மேன்மேலும் அபிவிருத்தியடைந்த வுண்மையைச் செவ்வனேவிளக்கும். அவருடைய கல்வித்திறமையின் மேன்மையை நன்றாகத்தெரிவிக்கும் பெயரிருக்க, குணத்தைமட்டிற்குறிக்கும் நல் லென்ற அடைமொழியை யெடுத்தாளுதல் ஒன்றாலும் பொருந்தாததென்பது சொல்லவும்வேண்டுமோ? ஆகவே நற்கீரரெனச்சொல்லல் பிழை

யென்று கொள்ளவேண்டுமேயல்லது அபிப்பிராயபேதமென்றுகொள்ளத்தகாது.

சுந்தரர் அருளால் தமிழ்முனிவனிட மிலக்கணங்கற்றுப்பலகலையுந்தோய்ந்து தெளிந்த புத்தியுள்ள நக்கீரராலியற்றப்பட்ட இச்சிறந்த முருகஸ்துதி அகவற்பாவாலமைந்திருக்கிறது. பெரும்பாலும் கடைச்சங்கத்தார்காலத்தியற்றப்பட்ட நூல்கள் அகவற்பாக்களாலேயே அமைந்தன. ஆதலால் புலவர் மிகவும் விரும்புஞ்செய்யுள் நடை அகவலே யென்பதுபெற்றாம்.

அகவற்பா.

மேலும் சொல்லவேண்டிய விஷயம் ஒன்றேயாதலாலும், அது மிகவும் அரியதாகையாலும், அங்கங்கே முற்றுப்பெறாது மேன்மேலும் கவியின் மனத்திலெழூஉம் உற்சாகத்தையும் அரிய கருத்துக்களையும் அவருக்குக் கடவுளிடத்துண்டாகும் பேரன்பையுந் தெரிவிப்பதற்கு இவ்வகவலடிகளே சிறந்த கருவியாகும். தட்டுத்தடையின்றி அங்கங்கே கூறவேண்டிய விஷயங்களைச்செவ்வனே கூறுவதற்கு இந்தச்செய்யுணடையே இடங்கொடுக்கும். குளகமாக எழுதப்படும் விருத்தங்களுமிவ்வாறே இடங்கொடுக்குமென்றாலும் அவ்விரண்டு செய்யுணடைக்குமுள்ள பல வேறுபாடுகளாலும் இலக்கணங்களாலும், விருத்தச்செய்யுளில் அகவல்போல எளிதில் கற்பவருக்கு ஓரேவிஷயத்தை அனேகம்பாடல்களில் தெரிவித்தல் கடினமாகும். பத்துப்பாட்டினுள் ஒவ்வொரு பாட்டிலும் கூறப்புக்கவிஷயம் ஒன்றேயாதலின் அதை விரிவாமாய் எடுத்துச்சொல்ல அகவலே பொருந்தினின்றது. மேலும் வசனநடைக்கும் செய்யுணடைக்கும் இடையில் முதற்படியாகநிற்பது அகவல் என்று நாம் நினைக்க அனேக நியாயங்களுண்டு. ஆகவே முதன்முதல் தமிழாராய்ந்த கல்வியிற்றேர்ந்த புலவர்களெல்லாம் அகவல் நடையையே யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். புலவர்க்குச் சிறிதும்

சிரமமின்றி விஷயங்களை மனதிலெண்ணியவண்ணம் உடனே தெரிவிப்பதற்குத் தக்க கருவியாகவுள்ளதே சிறந்த செய்யுணடையெனக்கொள்ளவேண்டும்.

மேலும் ஆற்றுப்படை அகவலில்தான் இயற்றவேண்டியது. ஓர் இரவலனை அவன் கருத்து நிறைவேறும்பொருட்டு ஒருவரிடத்து ஆற்றுப்படுப்பதாகக்கூறும் நூல் அகவலில் வருமென்பது அடியிற்கண்ட பன்னிருபாட்டியற் சூத்திரத்தாலறியலாம்.

“புரவலன் பரிசு கொண்டு மீண்ட
விரவலன் வெயிறெறு மிருங்கா னத்திடை
வறுமையு டன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கந்தப்
புரவல னூர் பெயர்கொடை பாராஅ
யாங்குநீ செல்கென விடுப்ப தாற்றுப்படை
ஓங்கிய வகுதா னகவலின் வருமே.”

இந்நூல் பழமையாயுள்ளதென்பதற்குத் தக்கவடையாளம் இதில் வடமொழிப்பதங்கள் அதிகமாக இல்லாதிருத்தலேயாம். தமிழ்மொழியில் வடமொழிப்பதங்கள் பெரும்பாலும் வில்லிபுத்தூரார்காலந்தொடங்கியே அளப்பிட்டுவந்தன. இதற்குக் காரணம் தமிழ்மொழியில் கருத்துக்களைத்தெரிவிக்கப் பதங்களகப்படாமையன்று.

நூலின்பழமை.

“உயர்தனிச்செம்மொழி”(Classic)யாகிய தமிழ்மொழியில் ஜீவாத்மாவின் மனத்திலுண்டாகத்தக்க கருத்துக்கள், உணர்ச்சிகள் யாவையுந் தெரிவிப்பதற்குத் தனித்தனிச் சொற்கள் உள்ளன. பெரும்பாலும் வடமொழியோடு தமிழ்மொழியும் கற்ற அனேகம்புலவர்கள் தமிழாராயப்புகுந்து வடமொழிப்பதங்களைத் தமிழின்கண்ணே தம்மையுமறியாதபடி செலுத்தியிருக்கக்கூடும். ஆசிரியர் நச்சினார்க்கினியர்போன்ற அனேக அந்தணர்கள் வடமொழியிலுந்தென்மொழியிலுந் தேர்ந்தறிந்தவராய்த் தமிழாரா

ய்ந்தனர். அவர்களோடுபழகிவந்த தமிழ்ப்புலவர்களும் இயல்பில் பேசும்போதுபயோகித்த சிற்சில வடமொழிப்பதங்களைத்தமது நூலில் ஆளுவது சாதாரணமே; இது பிழையுமன்று. அவ்விதம் எடுத்தாளுவது பிழையன்றென்பதை நிலைநிறுத்தவேநன்னூலில் வடமொழிச்சொற்களைத்தமிழிலெடுத்தாளவுதவியாகவுள்ள சில சூத்திரங்களும் இயற்றப்பட்டன. இன்னுமனேக வடமொழிப்பதங்கள் தென்மொழியில் வருவதும் 'காலவகையினன்' வழுவாகாது. பிறமொழிப்பதங்கள் வருவதும் சாதாரணமாகும். ஆயினும் மிகவும் பழமையாகவுள்ள இலக்கணநூல்களில் வடமொழிப்பதங்கள் தென்மொழியிலாளுவதைப்பற்றியசூத்திரங்களின்மையின் அவ்விதம் எடுத்தாளல் பிற்காலத்திலேதான்நடந்துவந்ததென்றுகொள்ளலாம். ஆகவே ஒருநூலில் வடமொழிப்பதமில்லாதிருப்பின், அந்நூல்மிகவும்பழமையானதென்று நிச்சயமாய்க்கொள்ளலாம். மேற்குறித்தகாரணங்களாலும் இந்நூலுக்கு இலக்கணம் தொல்காப்பியமாதலாலும், தமிழுக்கேயுரிய அனேகங்கருத்துக்கள் இந்நூலில் காணக்கிடைப்பதாலும் சீரியதமிழ் உலாவியகாலத்திலிதியற்றப்பட்டிருக்கவேண்டுமென்றுகொள்ள நியாயமுண்டு. ஆயினும் திருமுருகாற்றுப்படையிலும் வடமொழிச்சொற்கள் உள்ளனவென்று சொல்லலாம். அவையாவன உலகம், தெய்வம், சமம் என்பவையே. இவை வடமொழிச்சொற்களாயினும், தொன்றுதொட்டுத் தமிழில் அனேகம்புலவர்களாலெடுத்தாளப்பட்டுவந்து, வழக்கம்பற்றித் தமிழுக்கேயுரியவையாகித்தமிழ்ப்பதங்களோடு கலந்துவிட்டன. பழைய நூல்களில் இச்சொற்கள் ஆளப்பட்டிருக்கின்றன. இந்து உலகவழக்கத்தையொட்டியென்க. ஆயினும் தாமேயியற்றிய நெடுநல்வாடையுள் வையகம் என்ற தமிழ்ப்பதத்தை உபயோகித்தவர் இங்கே 'உலகம்' என்று தொடங்கியது ஒருவகை மங்களத்தையுத்தேசித்தென்று கொள்ளவேண்டும்.

இவர் அதிகசீலரென்பதும் நல்லொழுக்கமும் தெய்வபக்தியுமுடையவரென்பதும் இவரது நூல்மூலமாகவே நாமறியலாம். 'சுரும்புமூசாச்சுடர் பூங்காந்தட், பெருந்தண்கணிமிலைந்தசென்னியன்' என்பதில் கடவுளுக்குபயோகப்படவேண்டிய மலர்கள் சுரும்பினமும் மொய்க்கப்பெறாதசுத்தத்தையுடையவையாக விருத்தலைச் சொல்லியதில் இவரது நியமம் நன்குபுலப்படும். இவர் முக்காலமும் நீராடிச்சிவபிரானைத்துதித்து வாழுமியல்புள்ளவரென்பதும் மனத்தூய்மை பெரிதுமுடைய சிவனடியாரென்பதும்

இவர் அதிகசீல ரென்றது.

> "கப்பிலாமனத்தான் மூன்றுகாலமு மூழ்கி மூழ்கி
> யப்பனை யாலவா யெம்மடிகளை யடியார்சேம
> வைப்பினை யிறைஞ்சிநித்தம் வழிபடுநியமம் பூண்டான்"

என்ற பரஞ்சோதிமுனிவரியற்றிய திருவிளையாடற்புராணத்தில் கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடலச் செய்யுளால் தெரிந்துகொள்ளலாம்.

திருமுருகாற்றுப்படையில முனிவர்களைப்பற்றிக்கூறப்புகுந்தவிடத்து நக்கீரர் அவர்களது குணங்களையும் மாசில்லாதமனத்தையும், அவருடைய பரோபகாரச்செயலையும் பற்றிமிகவும் உயர்த்திக்கூறியிருக்கின்றார். மான்றோலினாலாகிய உடையைப்பரிசுத்தமாக அணிந்தவர்களாய், மனக்களங்கமற்று உபவாசத்துடன் கூடியவராய்க், கோபம், பகைமுதலியகெட்டகுணங்களைத் தவிர்த்து கற்றோரியாவருங்கொண்டாடும்படியானவிசேஷஞானமும் பரிபக்குவமுமுடையவர்களாய், அறமேவடிவெடுத்தாற்போன்றகாட்சிபொலியும்முனிவர்களைப்பற்றி, நக்கீரர் அதிக ஊக்கத்துடன் விவரித்துக்கூறப்புக்கது அவரது மனத்தூய்மையையும், சீலத்தையுஞ்செவ்வனே காட்டுகின்றது. மேலும் அந்தணர்களைப்பற்றிச்சொல்லவந்தவர் நீராடுங்காலத்தில் தோய்க்கப்பட்ட உடையை அப்படியேயிடையிலணிந்து அதிகநியமத்துடன்

அவர்கள்தெய்வத்தைவழிபடும் மரபினைச்சிறப்பித்துச்சொல்லியதுடன் தெய்வத்தைத் துதித்துக்கொண்டாடுங்கால் அதிக பயபக்தியோடும் சிரத்திற் கைகூப்பியிருக்கவேண்டுமென்று

'உச்சிக்கூப்பியகையினர்'

என்று சொல்லிப் பின்னும்முருகனைவழிபடவேண்டிய முறையையிரவலனுக்குக்கூறுமிடத்து நக்கீரர் சொல்வதெல்லாம் அவருக்கு வழக்கமாய் ஏற்பட்டுள்ள நியமத்தையே அவர் கூறுவதாகக்கொள்ளல் தகுதியாகும்.

"முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
யைவரு ளொருவ னங்கை யேற்ப
வறுவர் பயந்த வாறமர் செல்வ!
வால்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே"

என்று தொடங்கி நக்கீரர் முருகரைத்துதித்தபடி வேறியாவரேதுதிக்கவல்லார்கள்?

• கடவுளெங்கும் நிறைந்த பொருளென்பதை யுணர்ந்தவர், அக்கடவுள்,

"காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்"

இருப்பதன்றி, ஒருகால்தன்னை நினைப்பவர்மனத்திலே யுடனேதோன்றி அவர்களுக்குத் தன்னுண்மையுருவத்தைக்காண்பிப்பாரென்பதை

"வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
வாண்டாண் டுறைதலு மறிந்த வாறே"

என்று குறிப்பித்தார்.

இவ்வளவு சொல்லியுந்திருப்தியில்லாதவராய்க்கடவுளின் அந்தர்யாமித்வத்தைத்தெரிவிப்பது மிகவுங்கடினமென்பதையும் அதை ஒவ்வொருவரும் தாம்தாமே வுணர்ந்தறிய வேண்டுமென்பதையுந்தெரிவிப்பதற்கே,
"ஆண்டாண்டாயினுமாகக்காண்டக அறிந்தவாறே" என்றார்.

இனி 'அறிந்தவாறே' என்றுசொன்னமையின் இவ்வளவு கல்விச்சிறப்புள்ளவராயிருந்த இப்பெரியோரிடத்து கல்விக்கழகாயுள்ள அடக்கமுமுள்ளதென்பது கற்போர் அறியக்கிடக்கும்.

முருகர்தங்குமிடங்களாக மேற்கூறிய 'காடுங்காவும்' என்று தொடங்கிய அடிகளில் காட்டிய இருப்பிடங்கள்யாவும் மிகவும் அழகான இடங்கள். இயற்கையில், ஆற்றிடைக்குறை யாறு குளன் ஆதீண்டுகுற்றியிருக்குமிடம் முதலியவை கடவுளின்றன்மையை ஞானக்கண்ணுள்ளார்க்குத் தெரிவிப்பவையாயுள்ளன. கடவுளின்கருணை முதலியகுணங்களுக்கு மேற்குறித்த தலங்கள்யாவும் அறிகுறியாய்நிற்றற்குரியன. இறைவனலாக்கப்பட்ட ஒவ்வொருபகுதியிலும் அவர்தமது உண்மையுருவமும் கருத்தும் பார்ப்பவருக்குப்புலப்படவேண்டியே இயற்கையைத் தம்கருத்துக்கிணங்க அமைக்கின்றனரென்று சான்றோர்கொள்வர். அதுபோலவே வெற்றுடம்புபோல் மாயாமல் என்றும்நிலைநிற்கும்புகழுடம்போடுங்கூடிய சிறந்த நூல்களியற்றும் பாவலரும் ஏனைய மனிதர்கள் தமது நூலிற்போந்த கருத்துக்களையெல்லாம் நன்குணர்ந்து பிழைக்கவேண்டுமென்ற கருணையோடுகூடிய மனத்தையுடையவர்களாகவே நூல்களியற்றுகின்றார்கள். பரம உபகாரஞ்செய்யவெண்ணி நக்கீரரும் அவ்வாறே இயற்கையில் அதிகவனப்புள்ள சத்தமில்லாதவிடங்களைக் கடவுள் விளையாடத்தக்க விடங்களெனத்தெரிவித்து, அத்தகைய அழகமைந்த இயற்கையையும் அதன்

மூலமாகக் கடவுளையுந்தெரிசித்தலே சிறந்த வழியாகுமென்றுகுறிப்பிற்றெரிவித்தனர்போலும். இக்கருத்து நக்கீரரெவ்வாறு இயற்கையை வருணித்துள்ளாரென விசாரிக்கத் தூண்டும்.

இயற்கையாசிரியின் எழில் நல்லிசைப்புலவர்களுக்கே செவ்வையாகப்புலப்படும். அவர்கண்ணுக்கு ஒவ்வொருபொருளும் ஏதாவதொருநல்லொழுக்கத்தைச்சிறப்பித்துக் காட்ட நிற்பதாய்த்தோன்றும். நக்கீரர்

இயற்கை வருணனை

இயற்கை வருணனை செய்வதிற்சிறந்தவர். உள்ளதையுள்ளவாறு படிப்பவர் மனக்கண்ணுக்குப்புலப்படும்படி கூறத்தக்க சொல்வன்மையுடையவர். ஒருபொருளையும் ஒளிக்காமலும் யாதொன்றையும் விவரிக்காமலும் இயற்கையில் தோன்றியவாறே கூறுவர். இவர்மலை, மலையைச்சார்ந்தநாடு, காடு, அருவி, முதலியவைகளை இயற்கையில் அவைதோன்றுமாறே சொல்லவல்லவர். சுருக்கமாகவுந்தெளிவாகவும் ஒவ்வோர் இயற்கைக்காட்சியையும்பற்றிக்கூறவல்லவர். காட்டில்மரங்கள் நெருக்கமாகவளர்ந்து தழைத்திருப்பதைச்சொல்லவந்தவர் இயல்பாய்மரத்திற்கு மரந்தாவுகின்ற சுபாவத்தையுடையகுரங்கினமும் நெருக்கமாய் வளர்ந்திருக்கும் மரத்தின்கிளைகளின்மேலேயே தாவுவதற்கிடமின்றி நடந்துசெல்லுமியல்புடையனவாய் நெடுநாளாய் அவ்வாறே செல்லுதல்பற்றித் தமது தொழிலாகிய தாவுதற்செய்கையையுமறந்துபோயின வென்றுகூறி, அக்காட்டின் தோற்றத்தைப்படிப்பவர்க்குச் செவ்வையாகத்தெரிவிக்கின்றார்.

'மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்து'

இனி அதிக நுண்ணுணர்வுடைமையான் இயற்கையைச்செவ்வையாயறிந்தவராய் வண்டினங்களின் செயலை நன்காராய்ந்தறிந்த நக்கீரர், சுரும்பினத்திற்குப்பிரியமுள்ள ம

உள்ளத்தைத் துள்ள வாக்குரைத்தல்.

லர்களின்ன இன்னவென்பதையும், அவை அம்மலர்களில் தங்கிமகிழுங்காலமின்ன இன்னவென்பதையுந்தெரிவித்தலில் இயற்கையின்எழில் தமக்குத்தோன்றியவாறே பிறர்க்குந்தோன்றுமாறு கூறுகின்றனர்.

“இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரியன தான்று.”

மலையின் வீழருவியின் வேகத்தையும், அது மலைச்சாரலிலுள்ள மிருகஜாதி, புள்ளினம்முதலியவைகட் கதிகவூக்கத்தை விளைவிப்பதையும், அதன் நீர்ப்போக்கின் அழகையும் குறிப்புவகையான் மலையின் வளப்பத்தையுந்தெரிவிக்கக்கருதி, அந்நீர்ப்பெருக்கில் இன்னஇன்ன அடித்துக் கொணர்டுவரப்படுமென்பதையும் ஒருங்கே அச்சத்தினையும் மகிழ்ச்சியினையுந்தந்து இறைவனது பெருங்கருணையையுங் கம்பீரத்தையுந் தோன்றுவிப்பதுபோலச்செல்லும் அருவியின் தீர்த்தத்தை நக்கீரர் கூறியவண்ணம் பிறர்கூறல் அருமையேயாகும். அடியிற்குறித்த வருணனைமிகவும் பாராட்டற்பாலது.

“... ... ... அகில்சுமந்து
ஆர முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கம ழலரிறால் சிதைய நன்பல
வாசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுத
லிரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று

முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமு தறுமியத் தாழை
யிளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலோ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்னக்
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவி''

என்று ஒருவிஷயத்தையும் விடாமலும், யாதொன்றையும் அதிகமாக வருணிக்கத்தொடங்காமலும் உள்ளதை யுள்ளவாறு, அவ்வருவியின் வீழ்தலை முதன்முதற் கண்டவனுக்கு ஓரேகாலத்தில் கண்பார்த்துக் காதுகேட்கப் புலப்படுங் காட்சியினையும் ஓசையினையும் அதனாலவனடையக்கூடிய மகிழ்ச்சியையும் ஒருங்கே கற்பவர் மனதினால் எளிதிலறியும்படி நக்கீரர் அருவியைப்பற்றிச் சொல்லியதுபோல வேறெவர்தாம் சொல்லவல்லார்கள்.

இவையெல்லாம் கவிதாமே யனுபவித்துக்கூறியிருக்கின்றனர். இது விவேகசாதுர்யம். உள்ளவிஷயங்களை பிறர்க்கு அவைநன்குபுலப்படும்படி சொல்லப்புகுந்தவர் அற்பமென்றொன்றையுந்தள்ளிவிடாமல் இயற்கையின் நிகழ்ச்சியைத்தோன்றுமாறே கூறினர். இதுதான் கவிகளுக்குரிய சிறந்தவிலக்கணம். இந்த கவிச்செம்மை நக்கீரரிடத்து நிரம்பிநின்ற பொருளாகும். விழாக்காலங்களில் தினையரிசியையும் மலர்களையுஞ்சேர்த்து ஆடுகளோடு முருகருக்குத்திருப்தியாகப்பூசைபோடும் வழக்கத்தைக்கூறியதுமின்றி, வனத்தில் வேட்டையாடிப்பிழைக்கும் இயல்புள்ள மாந்தர் மலைக்கருகில், சிறுகிராமங்களில் வசித்து முருகனை

வழிபடும்போது தம்மினத்தார் பலரையும் ஒருங்கேகூட்டி, கையிற் காப்புகட்டி, கட்குடித்துவிளையாடி, பூசாரிமறியறுத்துப்பலிகொடுத்த தமதுகிராமத்தில் பிணியும் வறுமையும் பகையும் நீங்குகவென வேண்டிச்செய்யும் பூசையையும், அக்காலத்தில் அவர்கள் குறிஞ்சிப்பண்ணைப்பாடி, அந்நிலத்திற்கேற்ற வாத்தியங்களின் ஓசையை யெழுப்பி, பிணிமுகமென்ற பெயருள்ள யானையின்மீதேறிவந்து அடியார்களுக்கருள்புரியுமுருகனை அவர்கள் வழிபடுமுறைமையினை நாமிப்போது நேரிலே நின்றுபார்த்துக்களிப்பது போலமனத்திலச்சமும் உவகையுமுண்டாகும்படி, நக்கீரர் அப்பூசையை ஒருசிறிய விஷயத்தையும் விடாமல் சாங்கோபாங்கமாகக்கூறியிருக்கின்றார். அது வருமாறு:

"நெய்யோ டையவி யப்பியை துரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுட னுடீஇச
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசிச
சில்பலிச் செய்து பல்பிறப் பிரீஇச
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை யருவியோ டின்னியங் கறங்க
வுருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்து முரணி னருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்"

பூசைபோடுவதில் சற்றுந் தவறிருக்கக்கூடாதென்றே புட்டமாலையைச்சரிபாதியாய் அறுத்துத்தொங்கவிட்டார்

மேலும் தம்மனப்படியே கவி, மல்லிகைமுதலியமலர்களைப்பற்றிச்சொல்லப்புகாமல் அந்நிலத்தில் எளிதிற்கிடைக்கக்கூடிய மலரையே உள்ளதுள்ளவாறு குறிப்பிக்க,

'பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை' யென்றார்.

இப்படிப்பட்ட நுட்பவாராய்ச்சி ஏனைய இயற்கைவருணனையிலுமுள்ளது. சூரரமகளிரைப்பற்றிக்கூறப்புக்கவிடத்து அவர்கள் சூடும் மாலையினையும் அவர்கள்நெற்றியில்இலகுங்குறியின் வனப்பையும் ஏனையபொலிவுகளையுந்தனித்தனியே சிறப்பித்துக்கூறுகின்றனர். சூரபன்மாவைப்பற்றிச் சொல்லவந்தவர் படிப்போரும் அஞ்சும்படியாயுள்ள ஓசைகொண்ட சிலபதங்களால் அவ்'விருபேருருவின்ஒருபேரியாக்கை'யின் பயங்கரத்தோற்றத்தையும், பலவாறுகூறிப்பிறகு அந்த யாக்கை கூறுகூறும்படி வெட்டி வீழ்த்திய முருகரது 'எய்யாநல்லிசை'யையும் விளக்கிச்சொல்லியிருக்கின்றார். மதுரைநகரின் வளப்பமும் அங்கு அரசன், பகைவரொருவருமின்றி வாழும் பெருமையினையும், கூறுவான் புகுந்து

"செருப்புகன்றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல்"

என்றார்.

யானையினது முகத்திலிலங்கும் முகபடாமும் அதற்கு இருமருங்குமசையும் மணியினோசையும், அதன் வேகவன்மையும் நடையின் வேகமும் புலப்படுத்த ஒரு சிறிய பதத்தையெடுத்தாண்ட திட்பநுட்பம் பாராட்டத்தக்கது. 'கால்கிளர்ந்தன்னவேழம்' என்ற சொற்கள் வேழத்தின் கம்பீர நடையைக்காட்ட உபயோகிக்கப்பட்டன. 'கால்' என்ற சொல் விரைவையுங்குறிக்கும். நக்கீரர் பொருள் நிரம்பத்

தோன்றுஞ்சிறுபதங்களையெடுத்தாளுதல் மிகவுங் கவனிக்கத்தக்கது. தருணம் நேர்ந்துழி இந்த விஷயத்தைப்பற்றி விவரித்துக்கூறுவோம். இம்மாதிரியாகவே முனிவர்கள், கந்தர்வர்கள் தோற்றத்தினையும், ஆடுமகளிரழகினையுஞ் செவ்வையாக வருணித்திருக்கின்றார். அந்தணரைப்பற்றிச் சொல்லுமிடத்து அவர்களது பிரமசரிய ஆச்சிரமத்தின் மேன்மையையும், அந்நிலையின் றூய்மையையும், அவரது கல்வியையும், மனத்தெளிவையும், களங்கமில்லாத மனத்திற்கறிகுறியாகவமைந்த அவர்கள் மார்பிலிலங்கும் வண்ணநூலின் ஏற்றத்தினையும், அவர்களுக்கு முக்கிய செல்வமாயுள்ள முத்தீயின் சிறப்பையும், அவர்கள் அதிக தெய்வ பக்தியுள்ளவராய் வெகு நியமமாயும் மனக்களிப்புடனுஞ் செய்யும்பூசைக்கு முருகருவத்தலையும், திருமுருகாற்றுப்படைத்திருவேரகப்பகுதியிற் சுருக்கமாகவுந் தெளிவாகவுஞ் சொல்லியிருக்கின்றார்.

இவ்விதமாகவே ஒவ்வொரு விஷயத்தையும் நுண்ணிதினாய்ந்தறிந்து அவற்றின் பொருளையுந்தெரிந்து பிறர்க்குத்தாமனுபவித்தறிந்த விஷயங்களைத் தாமறிந்ததுபோலவே யிலேசாகச்சொல்வதில் நக்கீரர் மிகவுஞ் சிறந்தவராய் விளங்குகின்றார். அந்தணர் மார்பிலணியும் நூலின் பகுதிகளைக்கூட விடாமல் நுண்ணியவாராய்ச்சியுடையவிப்புலவர் 'ஒன்பதுகொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்' என்றார்.

கிரீடத்திலுள்ள பகுதிகளின்னவின்னவென்பதை யறிந்தவராய், தருணம்வாய்த்தவிடத்து,

'ஐவே றுருவிற் செய்வினை முற்றிய
முடி ... ... ...

என்றார்.

இவர் கூறும் உபமானங்களில் ஒரு பெரிய விசேஷமுண்டு. அதாவது உபமானங்களை மிகவும்விவரித்து அத

ற்கும் உபமேயத்திற்குமுள்ள பொருத்தத்தைத் தாமேமுற் றுந்தெரிவிக்காமல் கற்பவர்தாமே ஆராய்ந்துணரும்படிவை த்தலே. இது புலவர்களிடத்துள்ள சிறந்த குணமாகும். முருகருக்கு ஞாயிற்றை உபமானமாகஎடுத்துக்கொண்டார். அங்கு 'ஞாயிறுகடற்கண்டாங்கு' என்றுசொல்லி நிறுத்தி விட்டார். இனிக் கற்பவர் இவ்வுபமானத்தின் பொருத்த த்தினையும் அழகையுங்கண்டுணரவேண்டுமென்றே இதனோ டுநிறுத்தினர். இதற்கு நச்சினார்க்கினியருரை வருமாறு: "தொழிலுவவமும் வண்ணவுவமும்பற்றிவந்தது. என்னை? ஞாயிறு இருளைக்கெடுக்குமாறுபோலத் தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக்கெடுத்தலிற் றொழிலுவமமும் தன்னைக் கட்புலனால் நோக்குவார்க்குக் கடலிற்பசுமையும் ஞாயிற்றின் செம்மையும் தோன்றலின் வண்ணவுவமமும் கொள்ளக்கிடந்தமை காண்க." இவ்வளவு பொருள் விரிந் துகிடக்கும்படியான உபமானங்களையே நக்கீரர் எடுத்துச் சொல்லுகின்றார். தாமே அனைத்தையும் விவரிக்காது இவ் வாறு கற்பவரறியவிடுத்தலே கவியின் சிறந்த நுண்ணியவுண ர்வினைக்குறிக்கும்.

"... ... ... ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக்குமே"

என்றவிடத்து பொருள்களை விவரித்துக்காட்டத்தக்க தெ ளிவும், அப்படிக்கூறுமிடத்துக் கடவுளின் குளிர்ந்த கரு ணையும், ஒருங்கே தெரிவிப்பான் 'திங்களை' உபமானமாக வெடுத்துக்கொண்டனர். நக்கீரனார், சொல்லவேண்டியதை அளவுக்குமேல் விவரிக்காமலும், ஆயினும் போதிய அளவு சொல்லிமுடித்தும், எடுத்துக்கொண்டவிஷயம் பிறர்க்கு எளிதில் தெரியும்படியாகக்கூறும் சுருங்கச்சொல்லல், விள ங்கவைத்தலெனச் சொல்லப்படும் சிறந்தவிலக்கணங்களை

புடையவரென விதுவரையிற் கூறிவந்தோம். இவர் 'எண்பொருளவாகச் செலச்சொல்லும்' மூதறிவு தம்மிடத்து நிரம்பப்பெற்றவராய் அனேக விஷயங்களைத் தொகுத்துச் சீர்படுத்தி இலேசாகவும் அதிக தெளிவாகவுஞ்சொல்லும் பயிற்சியுள்ளவர்.

"இருள்படப் பொதுளிய பா அரை மராத்து"

... .. ...

"பாம்பு படப்புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறை
புள்ளணி நீள்கொடிச் செல்வன்"

என்றிவர் சுருக்கமாய்த் தெரிவிட்டதுபோலத் தெரிவித்தல் அரியதே. இச்சொல்வன்மையுந் தெளிவும் பாராட்டத்தக்கன.

இனி இவருக்குச் சங்கீதத்திலும் நல்ல அறிவும், கேள்வியும் இருந்ததாக அறியக்கிடக்கின்றது. குறிஞ்சிப்பண்ணைப்பற்றிமட்டில் கூறிநிறுத்தாமல் தருணம்நேர்ந்தவிடத்தெல்லாம், பாடுதற்றொழிலுக்கும், ஆடுதற்றொழிலுக்குமுள்ள பொருத்தத்தைச் சிறப்பித்துக் கூறியிருக்கின்றார்.

சங்கீதம்.

"சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரரமகளி ராடுஞ் சோலை"

என்ற அடிகளும்,

"குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர"

என்ற வருணனையு முற்றுநோக்கத்தக்கன. முற்காலத்தில் அரசரால் மிகவும் பாராட்டப்பட்டு, பொதுஜனங்களால் மிகவுங்கொண்டாடப்பட்டு அனேகர் யாழிசைத்தற்றொழிலில் மிகவும் வல்லவராய் விளங்கியிருந்தார்கள். இப்போதும் யாழி னின்றெழுமொலி பிறகருவிகளி னின்றெழுமொலியைவிட நிரம்பவினிப்பாயிருப்பது யாவருமறிந்தவிஷயம். மிகவும் உழைத்து அரிதிற்பெறத்தக்க வித்தையாகும் யாழிசைத்த

வில் முற்காலத்தில் அனேகர் சிறந்திருந்தனர். தமிழ்ப் புலவர்களிலனேகர் யாழ்வாசித்தலிற் சிறந்தவராயிருந்ததாகத் தெரிகின்றது. திருவள்ளுவரும் பிறகருவிகளையெடுத்துக்கொள்ளாது இந்நாட்டிற்கேயுரிய குழலையும் யாழையுமே சிறப்பிக்கவந்தவராகக் 'குழலினிது யாழினிது என்ப' என்று ஒரு குறள் தொடங்கியுள்ளார். நக்கீரருக்குச் சங்கீதப்பயிற்சியைவிட கேள்வியே மிக்கிருக்கவேண்டும். ஆன்மாவின் களிப்பு, உற்சாகம், தைரியம், துயரம் முதலியவுணர்ச்சிகள் யாவையும் வெளியே, மனத்தில்தோன்றியவாறு வெளியிடுங்கருவி சங்கீதமேயென நக்கீரர்கொண்டனரென்பதற்கையமில்லை.

“குளப்பு வழியன்ன கவடு படுத்தல்
விளக்கழ லுருவின் விசியுறு பச்சை
யெய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்
றைதுமயி ரொழுகிய தோற்றம் போல”

என்று முடத்தாமக்கண்ணியார் யாழினுறுப்புக்களையெல்லாந்தெரிந்தவராய்ஒவ்வொன்றையுஞ்சிறப்பித்துச்சொல்லி யாழின் அழகான தோற்றத்தைச் சிறந்த ஆடையாபரணங்களாற் செவ்வனே அலங்கரிக்கப்பட்ட மணப்பெண்ணின் றோற்றத்திற்குவமித்தபடி, நக்கீரர் யாழைப்பற்றிச் சொல்லவில்லை. அல்லது,

“உருக்கி யன்ன பொறுத்துரு போர்வைச்
சுனைவறந் தன்ன விருடேங் குவறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங் குதிவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்”

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறியபடி சில முக்கியமானவுறுப்புக்களைமட்டிலாவது யெடுத்துக்கொண்

டுஅவற்றைப்பற்றியாவது நக்கீரர் எடுத்துச்சொல்லவில்லை அல்லது உறுப்புக்களைப்பற்றிக் கூறவிட்டாலும், யாழ் வாசிக்கு முறைமையினையாவது முடத்தாமக்கண்ணியார் கூறியபடி

"வாரியும் வடித்தும் உந்தியு முறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி"

என்றபடியாவது நக்கீரர் கூறவில்லை. முடத்தாமக்கண்ணியார் மேலே காட்டிய அடிகளில் முதலடியில் நான்கு உம்மைகளைப் பொருத்திய நேர்த்தியும் (நேர்மையும்), பிறகு இரண்டாமடியில் யாழ்வாசிப்பவர் பாடுவதைப்பற்றியுஞ் சொல்லும் செவ்வியையுமுற்றுநோக்கினால், ஓரடி சுருதியும் மற்றோரடி லயமுமாகவுங் கற்போருக்குப் படுவதால், இவர் யாழிசைத்தற்றொழிலிலே நன்குணர்ந்தவராயிருக்கவேண்டுமென்றுறுதியாய்க்கூறலாம். திருமுருகாற்றுப்படையிலிருந்து நாம் ஆராயும்வரையில் அவ்விதம் நக்கீரரைப்பற்றிக் கூற, தகுந்த காரணமில்லாவிட்டாலும், நமது புலவருக்குள்ள பரந்த கேள்வியும், சங்கீதத்திலவருக்குள்ள நுண்ணியவுணர்வும், சங்கீதத்திற்கும் மனவுணர்ச்சிக்குமுள்ள சம்பந்தம்முதலிய சங்கீதசாஸ்திரத்தின் மேன்மையும் அதன் இலக்கணங்களும், இவர் எவ்வளவு அறிந்திருக்கின்றாரென்பதை யுன்னுந்தோறும் வியப்பும் மகிழ்ச்சியுந்தோன்றும். 'செவிநேர்புவைத்த செய்வுஉறுதிவவின் நல்லியாழ்' என சுருதிபேதங்களுக்கிணங்க நரம்புகட்டும் இலக்கணத்தைக் கூறினார். எப்படிப்பட்ட விஷயங்களையுஞ் சுருக்கமாகவே கூறுமியல்புள்ள நக்கீரர் யாழில் தமக்குள்ளவானந்தத்தைத் தெரிவிப்பதற்கு

"... ... ... நயனுடைநெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர"

என்றார். சங்கீதத்தைப்பற்றி நினைத்தமாத்திரத்தில் அமுதை நிரம்பவுண்டவரெனத்தோன்ற, அதன் இனிப்பைத்

தெரிவிப்பதற்கு வேறு அடைமொழி யொன்றுஞ்சேர்க்கா
து, இனிப்போவடிவெடுத்தாலொத்த நரம்பென்று பொருள்
பட 'இன்னரம்பு' என்று சொல்லி நிறுத்திவிட்டார். முடத்
தாமக்கண்ணியார்போல வாசிக்கும் முறையைக் கூறவிட்
டாலும், மெல்லிய வார்த்தைசொல்லும் கந்தருவர் அவர்
குரலுக்குப் பொருத்தமாயுள்ள யாழை வாசிக்கும்போது
எவ்வளவு இனிப்பாயிருக்குமென்ற மனோவேகம் பெரிது
மமைந்தே நக்கீரர் இவ்வாறு கூறினர். இவருக்கு யாழி
லுள்ள பிரியத்தை வேறொரு உபமானத்தில் பாடுமகளிரின்
குரல் நரம்பையொத்திருந்தது எனக் கூறியதால் நாம்
அறியலாம். 'நரம்பார்ந் தன்ன வின்குரற் றொகுதி' என
இவ்வாறு தேனினுமினிய அமுதுபில்கும் சங்கீதத்தின்
உண்மையையும், அதனினிப்பையுங்கண்ட நக்கீரர் தமது
நூலில் பொருட்கேற்ற வோசை பெரிதுமமைத்திருக்கின்
றனர். பொருள் சிறந்ததாயிருக்கும்போது ஓசையும் பத
மும் அதற்கியைய அமைவது முறையேயாகும். பொரு
ணலம் பெரிதுமமைந்த இத்திருமுருகாற்றுப்படையில்
ஓசையின்பமும் கவி சாதுர்யத்தாலும் அவரது மனோவே
கத்தாலும் நன்றாக அமைந்துள்ளது. ஓசையின்பத்தினும்
பொருட்கேற்ற வோசையமைந்துள்ள விடங்கள் பலவிருக்
கின்றன. கவியின் மனத்திற்றோன்றுங்கருத்துக்களுக்கி
ணங்க சொற்றொடர்கள் வருவதும், அவாது கருத்துக்களை
விளக்குவதாயுள்ள வோசைநயமும் ஒருங்கேயமைவதும்
மிகவும் மெச்சத்தக்கவிலக்கணங்கள். இந்நூலில் இவ்
வோசைநலத்தை நாம் பார்க்கக்கூடிய சிலவிடங்களையிங்கு
எடுத்துரைப்போம்.

மும்மூர்த்திகளும் தத்தமது தொழில் குற்றமின்றி
நடைபெறவும் தமக்குக்குறிப்பிட்டவேலைகளில் தாம் வழு
வாது நடந்துகொண்டு தமது மரபைக்கெடுத்துக்கொள்ளா

திருக்கவும் விரும்பியவர்களாய் இவையனைத்திற்கும் முருகனிடத்து வரவேண்டியது இன்றியமையாதிருத்தலின் அதிக சாவகாசமில்லாமையால் கடுகநடந்து 'வளிகிளர்ந்தன்ன செலவினராய்' ஒருங்கே பிறதேவருடனுந்திரண்டு வருவார்களென்பதைச்சொல்ல, அவர்கள் விரைவையும், வரும்வேலையின் அவஸரத்தினையும் செம்மையாகத்தெரிவிப்பனவாய் ஓசை பெரிதுமமைந்த சொற்களையே யெடுத்தாண்டு, கற்போருக்கு விஷயங்களை நமது புலவர் புலப்படுத்தியமை மிக்கக் கொண்டாடத்தக்கதாகும். பொருட்கேற்றவோசையமைந்த அடியிற்குறித்த செய்யுள்களைப் படிக்குந்தோறும் வியப்புத்தோன்றும்.

> “மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
> வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
> தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
> வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய
> வுறுகுறை மருங்கிற் றம்பெறுமுறை கொண்மா
> ரந்தரக் கொட்பினர் வந்துடன் காண”

ஆடுமகளிர் தமது தொழிற்கிணங்க வெகுவிரைவாகத் தம்மை யலங்கரித்துக்கொண்டு, அழகுபெற வருவதைக் கூற வந்தவிடத்து அவர்கள் ஆடுவதுபோலவும், அதற்கேற்பப் பாடுவதுபோலவும் ஓசைபடுமாறே சொல்லுகின்றனர். அவர்களோடு சேர்ந்தாடுவதற்கு முருகர் தாமுங் கச்சை கட்டித் தம்மை யழகுபொலியச்செய்துகொண்டு ஆயத்தமாய் வருவதையும், அவர் செய்யுங் குன்றுதோறாடலாகிய லீலையின் நிகழ்ச்சியையும் விவரித்துச் சிறப்பித்துச்சொல்ல சில பதங்களின் அமைப்பினாலும் ஓசையினாலுமே, தமது கருத்தைக் கவி யெளிதிற்றெரிவித்திருக்கின்றார். அவ்வருணனை வருமாறு:

> “... ... ... ...
> யிணைத்த கோதை யணைத்த கூந்தன்

முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிணர் இடையிடுபு
... ... ... ...
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல்லி யத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்"

இத்தருணத்தில் முருகரை நெடியனெனக்குறித்ததும் அவர் தோளைப்பற்றிக்கூறியதுங் கவனிக்கத்தக்க விஷயங்கள்.

வனத்திற்றிரியும் இயல்புடையோர்கள் முருகனை வழிபடும்போது அவர்கள் வாழும் நிலத்திற்குரிய பண்ணைப் பாடி அதற்கேற்ற வாத்தியங்களின் ஓசையை அவர் எழுப்புவதையும், வெறியாடுகளத்தில் மறியறுத்துப் பூசாரி அதிக பயபக்தியோடு ஒன்றாலுங் குறைவில்லாமல் பூசை போடுவதையும், சிலஜனங்கள் தம்முள் கூச்சலிட்டுக்கொக்கரித்து விசேஷமாயாரவாரிப்பதையும், கற்பவர் நேரில் நின்றுகேட்டாலெப்படியோ அப்படியே அவர்களுக்குப் புலப்படும்படி நக்கீரர் சொல்லுகின்றார்.

"துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி"

என்ற செய்யுளடிகளை நாம் சற்று விரைவாய்ப் படிப்போமானால் பாட்டிற்கேற்ற பக்கவாத்தியம வாசிப்பதுபோல் பொருளும் ஓசையும் ஒன்றுபட்டு நிற்பது செவிக்குப்புலப்படும்.

மேலே குறித்த வேடர் எழுப்பிய செயற்கையோசை

யைமட்டில் கவனியாது அவ்வோசையுடன் கலந்து இயற்கையில் 'இமிழிசையருவியும்' ஒலிப்பதை யிடனறிந்து கூறி நாம் நேரில் நின்று கேட்டுணர்ந்தானந்திப்பதுபோலவே நம்மனத்தில் மகிழ்ச்சியெழும்படி விவரித்துச்சொல்லிய கவிவிசித்திரம் மிகவும் பாராட்டத்தக்கது.

இமிழிசையருவியென்றதி லின்னொரு விசேஷமுண்டு ஜனங்கள்செய்யும் செயற்கைபோசை பொருளில்லாத கூச்சலாயிருப்ப, இயற்கையினோசை பொருளுடன் பொருந்தி முழங்கிற்றெனக் குறிப்பாற்றெரிவிக்கின்றார். மேலும் ஓர் அழகுள்ள பதார்த்தத்தைத் தனியே பார்த்து அழகென்று சொல்வதிலும் அழகில்லாத பொருள்களினிடையே அதை வைத்துநோக்கின் தாரதம்மியவுணர்ச்சியால் அழகு மேற்பட்டுக்காட்டுமாறுபோல இங்கே செயற்கையோசைக்கும் இயற்கை இசைக்குமுள்ள வித்தியாஸத்தைச் சீர்தூக்கி விளக்கியிருக்கின்றார். தவிர செயற்கையிற்செய்யும் சத்தமெல்லாஞ் சற்றுநேரத்திற்குள் அடங்காநிற்ப எக்காலத்தும் நிலைநின்ற இயற்கையி னின்னிசையைக்கொண்டாடி இயற்கையைப்புகழ்ந்து சொல்லுகிறாரெனக் கொள்ளல்வேண்டும். பிற்காலத்தில் தாயுமானவர் கூறிய,

"கற்றதுங் கேட்டதுந்தானே யேதுக்காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிட்டை கூட வன்றோ"

என்ற செய்யுளிலுள்ள கருத்தைத் தாமுட்கொண்டு அவ்வண்ணம் வெகுநாள் நடந்துவரும் நக்கீரருக்கு, ஜனங்கள் ஆரவாரமெல்லாம் பயனில்லாதனவென்றும் அதிற்பொருளில்லையென்றுந் தோன்றியுள்ளதால், அவர் இங்கு இயற்கையில் பரமமௌனத்தோடுங் கூடியதாய் நல்லிசையுடன் பொருந்திச்செல்லும் அருவியே பொருள் நிரம்பியதென்று கற்போருணருமாறு சொல்லுகின்றார். "இமிழிசை யருவியோ

டின்னியம்" என அடுக்கிவந்த உயிரெழுத்தாற்றொடங்கிய பதங்களோடு தக்க பதத்தைச்சேர்த்து அவ்வடியை முற்று மோனையாக்காது செவியிற் சட்டெனப்படும்படி 'கறங்க' என்று சொல்லியது மெய்யைப்பார்க்கிலும் உயிருக்குள்ள மேன்மையையும், அவ்வுயிர் யாக்கையிற்புக்கு வருந்துதலையும் ஒருவாறு குறிப்பித்தபடியெனக்கொள்ளலாம். நிற்க இவ்வளவு ஜனங்களும் இங்கே ஒருமித்து ஆரவாரிப்ப, அருவியில் ஓரிடத்தில் சற்றுத்தங்கிய நீர்த்துளி மறுநிமிஷம் அங்கு நில்லாது அதைவிட்டு மேன்மேலே சென்று கடலில் விழுவதைக்குறிப்பால் உணர்த்தி, ஜீவான்மாக்கள் இறுதியில் பரம்பொருளை யடையுமென்ற வுண்மைப்பொருளையுணர்த்த அருவியைக்குறித்து இங்கே சொன்னார். பொருள்நிரம்பிய அருவி அருகிலோடவும் அதனையுணராதுபொருளில்லாத பூசைகளைபபோட்டு அதனால் ஒரு பயனையடையக் கருதுவதையொழித்து முக்திக்கேதுவான அடக்கத்தினையும் 'பேசாத பெரிய மௌனத்தையும்' அருவிமூலமாகவும் ஜனங்கள் தெரிந்துகொள்ளவில்லையேயென்று பிறருக்காகப் பரிந்துநின்ற மகாசீலரான நக்கீரர் 'இமிழிசை யருவியோ டின்னியங் கறங்க' என்று எடுத்துச் சொன்னார். புத்திமான்களுக்கே இயற்கையின்பொருள் தெரிவதல்லது பிறருக்குத் தெரியமாட்டாதென்பதை இஃது குறிப்பித்ததென்றுங்கொள்ளலாம். ஆயினும் "நன்னகர் வாழ்த்தி", "பிணிமுகம் வாழ்த்தி", மிகுந்த பயபக்தியுடனும் பேரன்புடனும் கொஞ்சமுங்குறைவின்றி பூசைபோடும் படிமத்தான்முதலானவர்களிடத்தில் அதிக அன்புபற்றியே விவரித்து அவர்கள் பூசையைச்சொன்னாரெனினும் அமையும். அச்சத்தாலோ அல்லது அன்பாலோ எவ்விதமோ கடவுளை வழிபடுவது சிறந்ததென்று குறிப்பித்தாரெனினும் அமையும். "நன்னகர் வாழ்த்தி"

விசேஷ பூசை யின்ன இன்ன முறையிற் செய்தார்களெனக் கூறியதால், ஒருவகையால், நிஷ்காமகர்மமே, காமியகர்மத்தைவிடச்சிறந்ததென்று இவருக்குள்ள வுட்கருத்தைத் தெரிவித்தார். இனி அவ்வேடர்கள் முருகன்விஷயமாக அதிக ஆரவாரிப்புடன் போடும் பூசையைக் கண்ணுற்றுத் தாமுந்தமது தெய்வத்தை வணங்கவேண்டுமென்ற ஆவல் கொண்டவராய்ப் புலவர்களுக்குப் பெருந்தெய்வமாய் நல்லறிவு எக்காலத்தும் ஊட்டுந்தாயாகவுள்ள இயற்கையரசியைத் தரிசித்து வணங்கி உவகைமிக்கு கிளர்ந்தழீஇ 'இமிழிசையருவி' யென்றுசொல்லி நிறுத்திப் பிறகு தாங்கூற வந்த விஷயத்தைத் தொடர்ச்சியாய்ச் சொல்லப்புகுந்தனரெனக்கொள்ளல் சிறந்த பொருளாகும்.

சில புலவர்கள் தாமியற்றும் நூலின் பெயரை அந்நூலின் இடையிலே கதைப்போக்கினிலேயே தெரிவிப்பதுண்டு. இது ஒருவகைக் கவிசாதுர்யமாம். இது பழைய தமிழ்ப்புலவர்களிடம் இருந்த குணமெனத் தெரியவருகிறது. சிந்தாமணி யென்ற பெயரைத் திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணி யென்னும் நூலில் கதைப்போக்கிலேயே வெகுசாமர்த்தியமாய் அமைத்துக்காட்டியிருக்கின்றார்.

*நூற்பெயரைக்கதைப் போக்கினிற்குறித்தல்.*

“சிறந்தாருளரோ வுரையாயாற் சிந்தாமணியே கிடந்தியால்.”

முடத்தாமக்கண்ணியாருந் தமது பொருநராற்றுப் படையில், நூலில் ஆற்றுப்படை யென்ற சொல் வரும்படி யமைத்திருக்கின்றனர்.

“அறியாமையின் நெறி திரிந் தொராஅ
தாற்றெதிர்ப் படுத்தலும் நோற்றதன் பயனே”

மேற்குறித்தபடி ஒரு சொல்லையாவது, வேறு நூலின் முழுப்பெயரி லொருபாகத்தினைமட்டிலாவது நூலின் இடையிலமைக்காமல் நக்கீரர் முருகாற்றுப்படை யென்ற தாமியற்றிய நூலின் பெயர்முழுவதையும் நூலில் இடை

யில் தருணம் நேர்ந்துழி அமைத்துக்கூறிய கவித்திறம் மிகவும் மெச்சத்தக்கது.

"முருகிய நிறத்த முரணி னருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்."

முருகர் தோன்றிய வரலாற்றினையும், அவர் சரவணைப்பொய்கையில் வளர்ந்த பெருமையினையும், பிறகு தம்மை

சிலசரித்திரங்கள்.

யெதிர்த்தவர்களுடைய வலியில் பாதி தமக்குக்கிடைத்துவிடும்படி செய்யக்கூடிய அசுரர்களுக்கு அரிய பொருளாயிருந்த தலைகீழாக நிற்கும் வன்மையுடைய மாமரத்தை முருகர் வெட்டி வீழ்த்திய வீரத்தையும், சூரியனுடைய வெப்பத்தை யுலகத்தார் ஆற்றமுடியாதெனக் கருதி, சுடரோடு திரிந்து, அவ்வெப்பத்தைத் தம்மேற்கொண்டு ஜீவர்களைக்காக்கும் பரோபகார சிந்தையுள்ள முனிவர்கள் பெருமையினையும், நக்கீரர் மிக வுஞ்சுருக்கமாகவுந் தெளிவாகவுங் கூறியிருக்கின்றார்.

மதுரைமாநகரில் அரசுரிமைபூண்டவர்களுக்குப்பகைவரொருவருமின்றி அவர்கள் வாழும் சிறந்த வாழ்வை உயர்வுபடுத்திச் சொல்லுமிடத்து,

சில உயர்ந்த கருத்துக்கள்.

"வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்"

என்றார். திருப்பரங்குன்றத்திற் கெல்லைகூறுவதற்கு மதுரைநகரை யெடுத்துச்சொல்லவேண்டிய தவசியமாயிருந்தாலும், நக்கீரர் பிறந்து வளர்ந்து தமிழறிந்து வாழ்ந்துவந்த நகரம்பற்றித் தமதபிமானத்தை முன்னிட்டு மதுரையையாண்ட மன்னர்கள் பராக்கிரமம், அந்நகரின் வளமுதலிய சிறப்பித்துக்கூறினார். இனி மேற்கூறிய மதுரை கோபுர வாயிலின் வரலாற்றிற்குப் பொருள் வருமாறு: "பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுதற்குத் தூக்கின நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்

பாரின்மையிற் றூங்கிப்போ விடும்படி பகைவரில்லாமையால் போர் அரிதாய்ப்போன வாயில்"(எ-று). போர்வீரராகவுள்ளவர்கள் தமது பகைவர்களை ஆண்பிள்ளைகளென்றுகூடவெண்ணாமல் அவர்களை ஒருபொருளாய் மதியாமல் இருப்பதுமரபு. இங்கே நக்கீரர் கூறும் "பந்தொடுபாவை" என்ற கருத்து தமிழ்நாட்டிற்சிறந்த அரசர்களின் பராக்கிரமத்தைக்குறிப்பதற்காக வெனக்கொள்ளவேண்டும். ஒரே கருத்து பல தேசங்களில் பல சிறந்த புலவர்மாட்டுக் காண்பதுதான் ஆராய்ச்சி செய்வோருக்குக் களிப்பும் வியப்பும் உண்டுபண்ணும். இங்கே காட்டிய நக்கீரர் கருத்திற்கேற்ப மேல்நாட்டில் மிகுந்த புகழ்படைத்த நாடகக்கவியாகிய ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலப்புலவரும் தாமியற்றிய ஐந்தாவது ஹென்றியின் சரித்திரத்திலடியிற்கண்டபடி தெரிவித்திருக்கின்றார். நக்கீரர் கருத்தே இவருக்குமுள்ளது. அஃதாவது "பந்தொடுபாவை" தொங்கவிடுவதிற்றோன்று மிகழ்ச்சியைப் பொறாது போருக்கு நேர்ந்து எதிர்ப்பவர்கள்சுத்தவீரரேயாதலால், அவ்விதம் 'ஒருவருங்கோபியாது அவை தொங்கிநிற்றலைக் கண்டிருப்பவர்களிருப்பின், அவ்விதந்தொங்கவிடுபவர் பராக்கிரமம் மிகவுஞ் சிறந்ததென்பதற்கதுவே யறிகுறியாகுமென்பதே. ஆகவே பிரான்சுதேசத்திற்குரிமைகொண்டாடிய ஆங்கிலவரசனுக்குப் பிராஞ்சுதேசாதிபதி இகழ்ச்சியால் விளையாடுவதற்குப் பந்துகளனுப்ப, சுத்தவீரனாகிய ஆங்கிலமன்னன் அவ்விகழ்ச்சியைப்பொறாதவனாய் 'இப்பந்துகளை நான் இருப்புக்குண்டுகளென மதித்து, இருப்புக்குண்டுகளைக்கொண்டு ஆடும் விளையாட்டாகிய போரைச்செய்வதற்கு மிகுந்த ஆசைகொண்டவனாயிருக்கின்றேனென நும்மரசனிடம் அறிவியும்' என்று ஹென்றி பிரான்சுதேசத்திலிருந்து பந்துகொண்டு வந்த தூதரிடம் சொல்லியனுப்பியதாய் ஷேக்ஸ்பியர் கூறி

யதை நக்கீரர் "பங்தொடுபாவை" என்ற அடிகளிற்குறித்த கருத்தோடு ஒத்துப்பார்க்கலாம்.

**Shakespere**
**King Hentry V**
**Act. I Sc. 2.**

"When we have matched our rackets to these balls
We will in France, by God's grace play a set
Shall strike his father's crown into the hazard
.. .. ..
This mock of his
Hath turned his balls to gun stones."

மலர்கள் மலர்ந்து காண்போருக்கு மகிழ்ச்சிவிளைவிப்பதைக்குறிக்க 'கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்' எனச்சொல்லிய செம்மை மிகவும் கவனிக்கத்தக்கது. தெய்வயானையாரைக் குறிக்குமிடத்து, 'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்' என்றார். இதற்கு நச்சினார்க்கினியர் மறக்கற்பில்லாத அறக்கற்பினையுடைய தெய்வயானையாரெனப் பொருள் கூறிக் கற்புடைமையில் உள்ளவகைகளின்னவின்னவென்று தெரிவித்தார். பிறருக்கு யாதொரு தீங்குமின்றித் தம் நிறைவைத் தாம் காப்பாற்றிக்கொண்டு கொழுநனைப் பேணும் அறக்கற்பினைச்சிறப்பித்து அதன்மூலமாய் அப்படிப்பட்ட சிறந்த கற்புநிறைந்த தேவியோடுகூடியுள்ள முருகரது கருணை கடலினும்பெரிதென்று தோன்றுமாறு சிறந்த அறக்கற்பைப்பற்றி நூலின் தொடக்கத்திலேயே கூறினார்.

சில அருமையான பதப்பிரயோகங்கள்.

கவியின் மனத்தைச் செம்மையாய்த் தெரிவிப்பதாயுள்ள சில பதப்பிரயோகங்கள் திருமுருகாற்றுப்படையில் அருமையா யமைந்துள்ளன. திருமுருகாற்றுப்படை 'உலக முவப்ப' எனத்தொடங்கி 'கிழவோனே' என்று முடிந்திருத்தலிற் பொருள்விசேஷமென்னையெனின் முருகனே உலகிற்குரியவனென்பதும், அவனாணையாற் சகலமும் நடக்குமென்பதும் நாம் பெறும்படி கிடக்கின்றன. மேலும் 'உவப்ப' என்றதனால் முருகருக்கு எல்லா ஜீவராசி

களும் களித்திருக்கும்படி செய்தலே முக்கிய லீலையாகு மென்பதைப்பெற்றும். 'கிழவோனே' என்றதில் ஈற்றே காரந்தேற்றமாய்க்கொண்டு அவ்வுரிமையை யுடையவர் அவரன்றி வேறெவரும் உலகிற்கு உரிமைபாராட்டற்குரியர் இலரென்று கொள்ளக்கிடக்கின்றது.

"இழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே"

என்ற அடிகளில் ழகரம் நான்கிடத்திலிருப்பதையும், அவ்வடிகளின் விரைவான தட்டுத்தடையில்லாத ஓசையையும் எண்ணில் தம்மை வழிபடுவார்களுக்கு முருகவேள் வெகு சுலபத்தில் அருள்புரிவாரென்பதைக் கவி இங்கு பலப்படுத்துகிறாரென்று கொள்ள நியாயமுண்டு. பழம்முதிர் எனப்பிரியாமல் பழம்உதிர் எனப்பிரித்து உருவகவகையான் அருட்பழம் பெரிதும் உதவும் குமரக்கடவுளைத் துதித்ததாகக்கொள்ளலாம். தாம் அன்பர்களிடத்துச்செல்லுங்கால் முருகர் பிணிமுகம் என்ற சிறந்த யானையின்மேலேறிவந்து அருள்புரிதல் மரபு. அக்களிற்றினைப்பற்றிக் கூறுமிடத்துத் தன்னை நினைத்தவர்களிடுக்கண்ணைத் தீர்ப்பான்பொருட்டு இறைவன் ஒரு சிறிதும் தாமதியாமல் அதிக விரைவில் வந்து அருள்புரிவாரென்பது தோன்ற 'கால் கிளர்ந் தன்ன வேழம்' என்றார்.

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில் உள்ள சில பதப்பிரயோகங்கள் திருமுருகாற்றுப்படையிற் காணப்படுகின்றன; தவிர நக்கீரரே இயற்றியுள்ள நெடுநல்வாடையிலுள்ள சில அடிகளும் திருமுருகாற்றுப்படையில் சில அடிகளோடு ஒப்பிடத்தக்கனவாய் நிற்கின்றன. 'உலகம்' என நூல்களைத்தொடங்குவது ஒருவகை மங்களத்தை உத்தேசித்துக் கவிகள்தொடங்குவது மரபு. இவ்விஷயத்தை

பரிபாடல், நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை.

மேலே குறித்துள்ளோம். இவ்வாறு 'உலகம்' எனத்தொடங்கிய நூல்கள் பல. அவை மிகவும் பழமையான நூல்களாகவும் இருக்கின்றன,

"உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும
நிலை பெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே."

நக்கீரர் சில பதப்பிரயோகங்களில் அதிக பற்றுள்ளவரென்று சில உதாரணங்களாற் றெரிவிக்கலாம்.

{ திரு—'உலக முவப்ப வலனேர்பு திரிதரு'
{ நெடு—'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ'

{ திரு—'திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து'
{ நெடு—'திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பில்'

{ திரு—'நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி'
{ நெடு—'நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்'

தமிழ்மொழியை முதலில் அகத்தியனாருக்கு உபதேசித்தருளிய முருகக்கடவுளை மனமுவக்கும்படி பாடவல்ல நக்கீரருடைய பெருமை இததுணைத்தென்று எவ்வண்ணஞ் சொல்வது? இவர் விசேஷ கல்விப்பயிற்சியும், கவியிலக்கணமும் அமைந்தவர். மதுரைச்சங்கத்தில் சுந்தரருடன் ஒப்ப வீற்றிருந்து தமிழாராய்ந்த சிறந்த புகழ்படைத்த புலவர். சிவபிரானருளால் அகத்தியனாரிடத்தில் இலக்கணங்கற்றுணர்ந்து பிறகு, "தான் முன்செய்த கவிகள், முற்றுமாய்ந்து சொல்வழுக்களும் வழாநிலை முடிபு முற்றுநோக்கின"

நக்கீரர் கல்விச் சிறப்பு.

பெரியவர். இவரியற்றிய நூல்கள் தொகையாற் பலவாயின்றி சிலவாயிருப்பினும் இத்திருமுருகாற்றுப்படையொன்றியற்றிய காரணம்பற்றியே யிவரைப்புலவர்களுள் மேலான இடத்தில்வைத்துக்கொண்டாடலாம். இவர், சொற்கள் திட்பநுட்பத்தினும், இலக்கணவமைப்பினும், உபமான உபமேய அழகிலும், இயற்கையை யுள்ளவாறு புலப்படுத்துந்தெளிவிலும், சங்கீதஸாரங்களை யுணர்ந்தவைகளைத்தெரிவிக்குங்கூர்மையிலும், சுருக்கமாக விஷயங்களைத் தெளிவுடன் கூறவல்ல சொல்வன்மையிலும், பக்திரஸத்தைப்பெரிதுமெடுத்துரைக்குஞ் சிறப்பிலும், தத்துவப்பொருள்களை யிடமறிந்து புகட்டும் ஊக்கத்திலும், தமதுநாடு, அரசன், பாஷை இவைகளிலுள்ள நிரம்பிய அபிமானத்திலும், குறிஞ்சிநிலவருணனைசெய்வதிலும், தனக்கிணையொருவருமின்றி விளங்குதற்குரிய அதிக வியப்பையுண்டாக்கவல்ல தேர்ந்த கல்வியறிவுடையவராய் தமிழ்ப்புலவர்பலருள் மிகவுஞ்சிறந்து விளங்குகின்றார். குறிஞ்சிநிலத்தில் விளையும் பொருள்களையும், அந்நிலத்தில் வாழுமாக்கள் சிற்றூர்களையும், அவர்கள் வழக்க ஒழுக்கங்களையும், அவர்செய்யும் தெய்வவழிபாட்டினையும், ஒன்றுந்தவறாது கோர்வையாய் நக்கீரர் சொல்லிய செம்மை கற்போருக்குக்களிப்பையும், வியப்பையுமுதவுவதாயிருக்கும். குறிஞ்சிநிலத்தை நன்றுயறிந்தவரே, அந்நிலத்திற்கதிஷ்டான தேவதையாகவுள்ள முருகக்கடவுளைத்துதிக்கப் பொருத்தமாயிற்று.

தமது கொள்கையை அச்சமின்றி ஒருகால் முக்கண்ணனுக்குந்தெரிவித்த தீரபுத்தியுள்ளவர். பின்னர் தாம் விஷயங்களையெல்லாஞ் செம்மையாயுணர்ந்தபிறகு தாம் முன்பு சொல்லியது பிழையென்றறிந்து அதற்காக,

"அறிவின்றி முழுதொருங் குணர்ந்தோன்
சொற்றபாடலிற் பொருள்வழுச் சொல்லினே னென்று."

தன்னைத்தானே மிகவும் நொந்துகொண்ட நிச்சயபுத்தியுள்ளவர். தமிழுக்கேயுரிய சில கருத்துக்கள் அருமையாய் இவர் நூலில் அமைந்துள்ளன. இவர் பிற புலவர்போல் சாதாரணரல்லர். ஆழ்ந்த கல்வியறிவும், தெளிவும், கல்விக்கேற்ற அடக்கமும் பரோபகாரசிந்தையும், தெய்வபக்தியும், 'கப்பிலா' மனமுமுள்ள இப்புலவரைத் தமிழ்மொழிபயில்வோர் என்றுந்துதித்துக்கொண்டாடக் கடமைப்பட்டுள்ளார். தமிழ்மொழியில் எந்த கருத்தையும் புலவருக்கு அக்கருத்துக்கள் மனத்தில் தோன்றும்வண்ணம் எடுத்துச்சொல்லச் சொற்களும் சொற்றொடர்களுமிருப்பதை இவர் நூல்களாலறியலாம். ஆன்மாவுக்குறுதிபயப்பதாகிய இத்திருமுருகாற்றுப்படையில், கைம்மாறு கருதாது, உலகத்திற்கு நன்மைசெய்தலே தமக்குக் கடனாகக் கொண்டு, சுடரொடு பலகாலமுந்திரிந்து அதன் வெப்பத்தைத்தாமே பொறுத்துப் பிறர்க்குத் தாம் வருந்தியும் சுகமளிக்கும் மாண்புடைய முனிவரை நக்கீரர் சிறப்பித்துக் கூறிய காரணம் ஒன்றுபற்றியே அவரது மனத்தின் செம்மையை நாம் நன்கு அறியலாம்.

சில பதங்களில் பொருள்விசேஷங் கவனிக்கத்தக்கது. முதல்=தலைவன் (உ-ம்) சூர்முதல்; முதல்=மரம் (உ-ம்) மாமுதல்;

தமிழுக்கேயுரிய பதமாயினும் அப்பொருளில் இக்காலத்திலரிதாயப் பிரயோகிக்கப்பட்டுவருஞ் சிலபதங்கள் வருமாறு—பகட்டு (பெருமை); புலர (ஈரங்காய); ஐது (மறைவாய் உச்சரிக்கும் மந்திரம்); நகை (ஒளி); இத்துடன் சமமுறுக்கி, கருவுகோள்நெஞ்சம் முதலிய சொற்றொடர்களும் கவனிக்கத்தக்கன.

சிறந்த கல்வியறிவுநிறைந்த புலவராகிய நக்கீரர் தமக்கிணையின்றிச் சங்கத்திலினிதுவீற்றிருந்தனர். இவரில்லாத

சபையே அழகு குறைந்ததாகும். இவரொருவரிருப்பின் சபை கல்வியறிவுதோய்ந்த அழகான கூட்டமென்று மதிக்கப்படும். இவரைப்பற்றித் திருவிளையாடற்புராணத்தில் வெகு அழகாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. அச்செய்யுள் வருமாறு:

"என்றவேந்த னிலாக்குடி யீட்டமு மின்கதிர்
கான்றநாயக மாமணி போகிய கண்டியு
மான்றஞானமி லாதவர் கல்வியு மானதே
சான்றகீரனி லாதவை கூடின சங்கமே."

## உரையின் சிறப்பு.

பத்துப்பாட்டிற்குமின்னும் அனேகம் நூல்களுக்கும் உரையெழுதியுதவியவர் மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர். 'நச்சினார்க்கினியாய்போற்றி' என்று சிவபெருமானைப் பெரியோர்கள் துதித்துள்ளார்களாதலால் நச்சினார்க்கினியர் என்றது சிவபெருமானுடைய பெயர்களில் ஒன்றென நாமறியலாம். அப்பெயரைக்கொண்ட இவர் சைவஸமயியாய் இருத்தல்வேண்டுமென நாம் நிச்சயமாயறியலாம். இவர் அந்தணர். உரைச்சிறப்புப்பாயிரத்தில் இவர் பிறந்து வளர்ந்த ஊர், இவர் குலம் முதலியவை சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

"தண்டமிழ் தெரிந்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத்து வாச
னன்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாளன்
நவின்ற வாய்மை நச்சினார்க் கினியன்."

என்று நச்சினார்க்கினியருடைய குலம், கோத்திரம், கல்வி, கேள்விமுதலியவை விவரமாகவெடுத்துக்கூறப்பட்டுள்ளன.

திருமுருகாற்றுப்படையுரையில் இடையிடையே சிவபெருமானைக்குறித்தும் முருகரைக்குறித்தும் கூறும் பாகங்களில் இவர் எழுதிய வுரைவிசேஷங்களால் இவர் சைவசமயத்தினரென்பதும் மிகுந்த பக்தியுள்ளவரென்பதும் நாம் அறியக்கிடக்கின்றன.

திருமுருகாற்றுப்படையில் 'அந்தணர்' என்ற பதத்திற்கு "அந்தத்தை யணவுவார் அந்தணர். என்றது வேதாந்தத்தையே நோக்குவாரென்றவாறு" என்று விசேடவுரை கொடுத்துள்ள இவ்வந்தணசிரேஷ்டர் மேற்குறித்த கருத்திற்கிணங்கவே தமது வாணாளை வீணாக்காது பாதுகாந்துக்கடவுளிடத்திற் பேரன்புபூண்டொழுகிவந்தார். இவர் மிக்க கல்விப்பயிற்சியும், தெய்வபக்தியும், புத்திகூர்மையுந் தெளிவுமுள்ளவர். பத்துப்பாட்டு தவிர, சிறந்த விலக்கண இலக்கிய நூல்களாகும் தொல்காப்பியம், சிந்தாமணிமுதலிய நூல்களுக்கும் உரையெழுதியிருக்கின்றனர்.

உரையெழுதுங்காலத்தில் விசேஷமாயெழுதப்புகாது வேண்டியவரையிற் சிற்சிலவிடங்களில் முடிபைக் காட்டியும், வேறுசிலவிடங்களில் இலக்கணவமைதியைக்காட்டியும் நிறுத்திவிடுவார். சிலவிடங்களில் மேற்கோள் காட்டியும் வேறுசிலவிடங்களில் முக்கியமாயுள்ள கதையைச்சுருக்கமாகச்சொல்லியும் முடிப்பார். சிலவிடத்து சொற்களுக்குள்ள இரண்டுமூன்று பொருள்களையும் அவைகளுள் பழக்கத்திலுள்ள பொருள்வேறுபாட்டினையுந் தெரிவிப்பார். இது மாட்டென்னுமிலக்கணத்திற்கிணங்க எழுதிய வுரையாம். உரையெழுதுவதில் இதுவே நிரம்ப மெச்சத்தக்கமுறையெனக் கற்றோர் தேர்ந்தெடுக்கிறார்கள். மாட்டிலக்கணமாவது,

"அகன்று பொருள்கிடப்பினு மணுகிய நிலையினு
மியன்று பொருண்முடியத் தந்தன ருணர்த்தன்
மாட்டெனமொழிப பாட்டியல் வழக்கின்."

பொருள்கொள்ளுங்காலத்தில் அகன்று பொருள் கிடக்கும் படிசெய்யினும் அணுகிக்கிடப்பச்செய்யினும் இரண்டுவகையினுஞ்சென்று பொருள் முடியுமாற்றாற் கொணர்ந்துரைப்பச்செய்தலே மாட்டென்று சொல்வார்கள். பத்துப்பாட்டில் ஒவ்வொருபாட்டும் ஒரேவிஷயத்தைப்பற்றிக் கூறுவதாய்ப் பொருள் அகன்றுகிடப்பதாயிருத்தலின் அதற்கு உரையெழுத மாட்டிலக்கணமே சிறந்ததாய் விளங்கும்.

I. சந்தர்ப்பத்திற்கேற்ப நச்சினார்க்கினியர் பொருளுரைப்பார்.

1. உலகம் உவப்ப—உலகமென்பது பலபொருளொருசொல்லாய் நிலத்தையும் உயிர்களையும் ஒழுக்கத்தையுமுணர்த்தி நிற்குமேனும் ஈண்டு உவப்பவென்றதனான் மண்ணிடத்து வாழுஞ் சீவான்மாக்களையுணர்த்திற்று.

2. வசிந்துவாங்கு நிமிர்தோள்—வசிந்து என்பதற்கு பகைவர்களைப் பிளந்து என்று பொருள்கொள்ளவேண்டும். படைக்கலங்களால் வடுப்பட்டென்று பொருளுரைக்கலாமாயினும் இறைவனுதலிற்பொருந்தாது என்றார்.

II. சிலவிடத்து விசேடபொருளுரைப்பின் அதற்குத்தக்க காரணங்கூறுவார்.

1. கணவன்—இதை முன்கூறினார் படைத்தற்குங்காத்தற்கு முரிமைதோன்ற.

2. உருள்பூ—இது போகத்திற்குரிய தார். இத

லை முற்கூறினர் வாணுதல்கணவனென்றதனை நோக்கி.

III. சில பதங்களுக்குப் பலபொருள் கூறி விளக்குவார்.

1. மால்வரை—பெருமையையுடையமலை. இனித்திருமால்போலுங் குவடுகளோங்கிய மலை யென்றுமாம்.

2. பார்முதிர்பனிக்கடல்—பாராகிய நிலம் முற்றுப்பெற்ற குளிர்ச்சியையுடைய கடல். பார்=பாறை. மண்ணிடத்தே முதிர்ந்த கடலென்றுமாம்.

IV. சிலவிடங்களில் பொருள் விரித்துக் கருத்தை விளக்குவார்.

சமமுருக்கி—ஸமம் கெடுத்தலாவது தேவரையும் அசுரரையும் ஒப்பக் கருதாது தேவரைக்காத்து அசுரரையழித்தல்.

V. மேற்கோள்காட்டி அபிப்பிராயங்களைச் செவ்வையாய்த்தெரிவிப்பார்.

1. மடவரல் வள்ளியொடு நகையமர்ந்து—காம நுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான் உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென்றுணர்க. அது,

"தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ."

என்பதனானுணர்க.

2. பெரும்பெயர்முருக- பெரும்பொருளையுடையமுருக.

"பெற்ற பெரும்பெயர் பலர் கையிரீஇய"

எனவரும்.

பெரும்பொருளென்றது—வீட்டினை.

3. விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ—
தேவருலகைத்தீண்டும் நெடிய வரைகளையுடைய குறிஞ்சிநிலத்திற்கு உரிமையுடையாய்.

அதற்குரியனாதல்—"சேயோன் மேயமைவரையுலகமும்" என்பதனானுணர்க.

VI. இலக்கணங்கூறிப் பொருள்கொள்வர்.

1. வாள்போழ் விசும்பு—வாள் ஆகுபெயர்=திங்கள்.

2. கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு.
(பொருள்) கவின்று.........அழகுபெற்றுத் தோன்றுகின்ற நீர்க்கீழ் நின்ற சிவந்த அரும்பு. கவினென்னும் பண்படியாகக் கவின்றென்னுந் தொழில் பிறந்தது.

VII. சொற்களின் நுண்ணிய பொருளையும் பிரயோக விதியையுஞ் சிலவிடத்தெடுத்துச் சொல்வார். பொருள் ஒன்றாயினும் சொற்களுக்குள்ள கருத்து வேறுபாடுகளை நுண்ணிதினாராய்ந்து கூறுவார்.

1. இகலொடுசெற்றம் நீக்கியமனத்தினர்—பகைமை நெடுங்காலம் நிகழ்வது செற்றம்.

2. காமமொடு கடுஞ்சினங் கடிந்த காட்சியா—
கோபத்தின் பின்னாகச் சிறிதுபொழுது நிற்பது சினம்.

இன்னும் இவருடைய உரையில் நாம் காணக்கூடிய விசேடங்களநேகம். இவர் சிற்சிலவிடங்களில் கூறும்

பதஸாரம் நிரம்ப வியக்கத்தக்கது. சீவகசிந்தாமணியென்ற அருமையான பழைய தமிழ்நூலுக்கெத்துணையிலேசாகவுரையெழுதியிருக்கின்றார்! பலகலைப்புலமையும் அமைந்து தமிழில் அதிகப்பற்றுள்ளவராய் நூல்களை ஆராய்ச்சி செய்வதே தமக்குக் காலப்போக்காகக்கொண்ட நச்சினார்க்கினியருரையின் செவ்வியை யென்னென்றெடுத்துரைப்பது? நக்கீரரியற்றிய திருமுருகாற்றுப்படை மூலம் நமக்குக்கிடைத்தாலும் நச்சினார்க்கினியருரையுடன் அதனைப் படித்தலிற்றோன்றும் ஆனந்தம் மூலத்தைமட்டில் படித்தவிற்றோன்றாது. நூலாசிரியரைக்காட்டிலும் உரையாசிரியருக்கே கருத்தாராய்வதிற் செம்மை விளங்கத்தோன்றும். மேலும் நூலாசிரியரின் கருத்துக்களை நன்குணர்ந்து அதனையெடுத்துச்சொல்வதில் உரையாசிரியர் எவ்வளவு உபகாரிகளாக விளங்குகின்றனர். நச்சினார்க்கினியர் கவிகள் கருத்துக்களையும் அவர்களியற்றிய சொற்றொடர்களின் பொருளையுமினிதுணர்ந்து உரைசெய்திருக்கின்றார். நூலாசிரியர்கள்காலத்திலேயிருந்து தமிழாராய்ந்து அவர்களுடன் பழகி நெடுங்காலம் “கலந்தினிதுறைந்து” அவர்கள் கருத்துக்களை நேரிலே யுணர்ந்து நச்சினார்க்கினியர் உரையியற்றவில்லை. நூலாசிரியர்களுக்குப்பின் வெகுவருடங்கள் கழிந்தபின்னர்த்தோன்றித் தமது மனோவேகத்தாலும் சிறந்த கேள்வியாலும் தமிழ்நிரப்பிய பயிற்சியாலும் ஒவ்வொரு புலவரின் கொள்கை, ஆசாரம் முதலியவையும் அவர் வாழ்ந்தகாலத்திய நாகரிகமுதலியனவற்றையும் நன்றாய்த் தெரிந்துகொண்டு, கவிகளின் மனத்தூடு சென்று பொருள் கூறியிருக்கின்றனர். இவர் அனேக நூல்களில் பன்னாட்

நச்சினார்க்கினியர்.

பழகிப் பலபெரியோர்வாய்க் கேட்டுணர்ந்து பிறகு தம்மனத்திலெழுந்த பாஷாபிமானத்தால் உரையெழுதியதாகத் தெரிகிறது. இவரைப்போல்

தமிழ்மொழிபயில்வோருக்குப் பரமோபகாரஞ் செய்தவர் வேறெவருமில்லை. பரிமேலழகர், பேராசிரியர்முதலியவர்கள் சில நூல்களுக்கு உரையெழுதினார்களேனும் உரையெழுதுதலையே தமது காலப்போக்காக்கி மிகுந்த அன்பு பூண்டு உரையெழுதியவர் நச்சினார்க்கினியரே. இவரியற்றும் உரையின் சிறப்பும், தெளிவும், நுண்ணியபொருள்களை யிடனறிந்து கோத்துச்சொல்லுங் கல்வித்திறமையும் யாவரும் மெச்சத்தக்கன. இவரது உரையின் அழகினை எடுத்துரைத்தல் முடியாது, அது அவரவர் படித்துணர வேண்டிய விஷயம். ஏனெனில் உரையின் அழகு உணர்ந்தறியவேண்டியதே தவிர கண்டானந்திக்கத்தக்க விஷயமல்ல.

இவர் கல்வித்திறமையைக்கண்டு வியந்து பக்திசிரத்தையால் இவரை நாம் வணங்குவதே முறையாகுமேயல்லது இவரது உரையின் செம்மையைப் பலவாற்றானுமெடுத்துரைப்பினும் முடியாத காரியமாகும்.

"எவனூல வாயிடைவந் தமுதவா யுடையனென
வியப்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை
யெழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி எவனச்சி னார்க்கினிய
னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென
தகத்து மன்னே."

ஸீ. பி. வேங்கடராம ஐயர், பீ. ஏ.